# சுபீட்சம்

சுபீட்சம் SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

வெள்ளிக்கிழமை 03.09.2021 supeedsam.com supeedsam@gmail.com







# விடுதலைப்புலிகள் அமைப்பின் மீதான தடையை தொடர பிரிட்டன் தீர்மானம்

## இலங்கை வெளிவிவகார அமைச்சு

விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்பில் இலங்கை அரசுக்கு பிரித்தானியா வழங்கிய தகவல் விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பாக தடை செய்ய பிரித்தானிய அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக இலங்கை அரசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சு விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

குறித்த அறிக்கையில்,

2000ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க ஐக்கிய இராச்சிய பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்.ரீ.ரீ.ஈ) ஒரு பயங்கரவாத அமைப்பாக தடை செய்யப்படுவதற்கு ஐக்கிய இராச்சிய உள்துறைச் செயலாளர் தீர்மானித்திருக்கின்றமை குறித்து இலங்கை அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

# சிங்கள மயமாக்கல்,தமிழர்களின் நிலங்களை பறிக்கின்ற செயற்பாடுகள் தீவிரம்



(நமது நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட தண்ணிமுறிப்பு கமக்கார அமைப்பினர் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு தாங்கள் பூர்வீகமாகத் தொடர்ச்சியாக விவசாயம் செய்து கொண்டிருக்கின்ற காணிகளை வனவள திணைக்களத்தினரும் ஒரு பௌத்த மதகுருவும் வந்து தங்களுடைய வேலைகளை

02 ஆம் பக்கத்தில்...

## புதிய அரசியலமைப்பு

# சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை மேம்படுத்துகின்ற சாசனமாகவே அமையும்

(துறையூர் சஞ்சயன்)



புதியதொரு அரசியலமைப்பை உருவாக்க வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு இல்லை. அவ்வாறு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டாலும் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை மேம்படுத்துகின்ற சாசனமாகவே அமையும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

# சாணக்கியனுக்கு முதலிடம்



நாடாளுமன்றத்தில் சிறப்பாக செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தரவரிசையினை மந்திரி. எல்கே என்ற இணையத்தளம் வெளியிட்டு வருகின்றது.

இந்தநிலையில் தற்போது புதிய தரப்படுத்தல் பட்டியலினை குறித்த இணையத்தளம் வெளியிட்டுள்ளது.

புதிய தரப்படுத்தலில் இரா.சாணக்கியன் முதல் இடத்தினை பிடித்துள்ளதுடன், அமைச்சர் சரத் வீரசேகர இரண்டாவது இடத்தினையும், புத்திக பத்திரன மூன்றாவது இடத்தினையும் பிடித்துள்ளனர்.

# புதிய திட்டத்தை பரீட்சிப்பதற்காக விவசாயிகளின் தலையில் மிளகாய் அரைக்க நினைக்க வேண்டாம்

## மட்டக்களப்பு மாவட்ட விவசாய சம்மேளனம் வேண்டுகோள்!!



(மட்டக்களப்பு விசேட நிருபர்)

புதிய திட்டங்களை பரீட்சிப்பதற்காக விவசாயிகளின் தலையில் மிளகாய் அரைக்க நினைக்க வேண்டாமென மட்டக்களப்பு மாவட்ட விவசாய சம்மேளனம் வேண்டுகோள் விடுப்பதாக மட்டக்களப்பு ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில்

02 ஆம் பக்கத்தில்...

# இன்று விளக்கேற்றுங்கள்



பரவி வருகின்ற தொற்று நோய் கட்டுப்படுத்தப்படும் என்ற எதிர்பார்ப்பில் இந்த நோயால் உயிரிழந்தவர்களை நினைவு கூர்வதற்காக, இன்று மாலை 06.06 க்கு பொதுமக்கள் தமது வீடுகளில் விளக்கேற்றி பிரார்த்தனை செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...







## மட்டக்களப்பில்

# 109 வயது ஆச்சியை பலியெடுத்த கோரோனா

(எருவில் துசி)



மட்டக்களப்பு ஆரையம்பதி சுகாதாரப்பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்புக்கிராமத்தில் வசித்துவந்த 109 வயது நிரம்பியசெம்பக்குட்டி செல்லம்மா எனும் வயோதிபத்தாய் கொவிட் தொற்று காரணமாக நேற்று மரணமடைந்துள்ளார்.

மண்முனைப்பற்று பிரதேசத்தில் அதிகூடிய வயதுடன் வாழ்ந்து வழ்ந்து வந்த

02 ஆம் பக்கத்தில்...

# உ முகக்கவசங்களை அணியுங்கள்



கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருகின்றமையால் முடியுமானால் இரண்டு முகக்கவசங்களை அணியுமாறு நாட்டு மக்களிடம் கேட்டுக் கொள்வதாக இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

# சிறையில் றிஷாட்டிடமிருந்து கையடக்க தோலைபேசி மீட்பு

(ஊர்காவலன்)

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக் கூடத்தில் இருந்து

02 ஆம் பக்கத்தில்...

# சஹ்ரானின் சகோதரி உள்ளிட்ட 64 பேர் தோடர்ந்தும் விளக்கமறியலில்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் காத்தான்குடியில் கைது செய்யப்பட்ட சஹ்ரானின் சகோதரி, சியோன் தேவலாய தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் உட்பட 64 பேரையும்

02 ஆம் பக்கத்தில்...

# வவுணதீவில் கைக் குண்டுகள் மீட்பு



(மட்டக்களப்பு விசேட நிருபர்)

மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாவற்கொடிச்சேனை பகுதியில் விவசாய காணியிலிருந்து கைக் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...







# தெற்காசியாவில் கோவிட் வைரஸ் தாக்கத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட நாடாக இலங்கை அடையாளம்

தெற்காசியாவில் கொவிட் வைரஸ் தாக்கத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நாடாக இலங்கை அடையாளப்படுத்தப்பட்டிருப்பதாக சுகாதார வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் கோவிட் மரணங்களானது 19 வீதத்தினால் அதிகரித்துள்ளதாகவும், இந்தியாவை விடவும் மோசமான நிலையில் அபாயகரமான கட்டத்தில் இலங்கை உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தூரநோக்குதிட்டங்களை விடவும் மக்களை பாதுகாக்க உடனடி தீர்மானங்களை இப்போது முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தெற்காசிய வலயத்திற்கான கோவிட் நிலைமைகள் குறித்து உலக சுகாதார தாபனம் தனது அறிக்கையை முன்வைத்துள்ள நிலையில், சுகாதார தரப்பினர் அறிக்கை குறித்தும் இலங்கையில் நிலைமைகள் குறித்தும் கொண்டுள்ள நிலைப்பாடுகள் தொடர்பில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக ஆய்வு மையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் நீலிகா மளவிகே கூறுகையில்,

உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆய்வுக்குகுழுவுடன் இணைந்து இலங்கையின் வைத்திய நிபுணர்கள் 15 பேர் ஆய்வு வேலைத்திட்டமொன்றை முன்னெடுத்து வருகின்றோம்.

ஏற்கனவே இணைந்த அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருந்த நிலையில் தற்போது உலக சுகாதார ஸ்தாபனம் புதிய அறிக்கை ஒன்றினை முன்வைத்துள்ளது.

இதில் இலங்கை உள்ளிட்ட மூன்று நாடுகளில் கோவிட் மரணங்களின் எண்ணிக்கை ஆகஸ்ட் மாதத்தின் இறுதிப் பகுதியில் 15 வீதத்தினால் அதிகரித்துள்ளதாக கூறப்படுகின்றது.

சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவிக்கையில்,

கடந்த வாரத்தில் மாத்திரம் தெற்காசிய பிராந்தியத்தில் 14,000 கோவிட் மரணங்கள் பதிவாகியுள்ளன. இலங்கை இந்தியாவின் மரணவீத அதிகரிப்பினால் மோசமான பதிவுகள் பதிவாகியுள்ளன.

எனவே நிலைமைகளை கட்டுப்படுத்த துரிதமான அதேபோல் கடுமையான நடவடிக்கைளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

இப்போதும் நாம் ஆபத்தான கட்டத்தில் உள்ளோம் என்பதை ஏற்றுக்கொண்டு தற்போது வைரஸ் பரவலை கட்டுப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை ஆராய வேண்டும்.

இப்போது நீண்டகால தூரநோக்கு திட்டங்களை ஆராய்ந்து கொண்டிருக்காது மக்களை காப்பாற்றும் தீர்மானங்கள் எடுப்பதே முக்கியம். ஆசியாவில் மிக மோசமான வைரஸ் தாக்கம் கொண்ட நாடாக இலங்கை அடையாளபடுத்தப்படுகின்றது என்பதை மனதில் வைத்து தீர்மானம் எடுக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

## மட்டக்களப்பில் 109 வயது ஆச்சியை

குறிப்பிட்ட வயோதிபத்தாய்க்கு 12 பிள்ளைகள், 62 பேரப்பிள்ளைகள், 147 பூட்டப்பிள்ளைகள், 27 கொள்ளுப்பிள்ளைகள் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## சிறையில் றிஷாட்டிடமிருந்து கையடக்க

கையடக்க தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ரிஷாட் பதியுதீன், கொழும்பு மெகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

சிறைச்சாலை அதிகாரிகள் ரிஷாட் பதியுதீன் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக் கூடத்தைப் பரிசோதித்த போதே, கையடக்க தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ரிஷாட் பதியுதீன் கையடக்க தொலைபேசியில் உரையாடுவதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதிகாரிகள் பரிசோதித்துள்ளனர்.

சிறைச்சாலை அதிகாரிகள் பரிசோதிக்க வந்தபோது, கையடக்க தொலைபேசியை சிறைக் கூடத்துக்கு வெளியே வீசியுள்ளதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## வவுணதீவில் கைக் குண்டுகள் மீட்பு

நேற்று பிற்பகல் குறித்த காணியின் உரிமையாளர் காணியை விவசாய செய்கைக்காக துாய்மைப்படுத்திக் கொண்டிருந்தபோது பொலீத்தின் பைகளினால் சுற்றப்பட்ட நிலையில் இருந்து கைக்குண்டுகள் கண்டுள்ளதுடன், பொலிசாருக்கு அறிவித்துள்ளார்.

குறித்த பகுதியில் மூன்று கைக்குண்டுகள் சுற்றப்பட்ட நிலையில் இருந்ததாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்ததுடன், குறித்த கைக் குண்டுகளை பொலிசார் மீட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுன தீவு பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சஹ்ரானின் சகோதரி உள்ளிட்ட 64 பேர் தொடர்ந்தும்

எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி.எம்.றிஸ்வான் காணொளி தொழில்நுட்பம் மூலமாக நேற்று உத்தரவிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறன்று இடம் பெற்ற தாக்குதலின் பின்னர் சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் இவர்கள் ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தில் காத்தான்குடியை சேர்ந்த 65 பேரை கைதுசெய்திருந்தனர். இதேவேளை சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர், உட்பட 4 பேரை மட்டக்களப்பு பொலிஸார் கைது செய்திருந்தனர். இரு வெவ்வேறு வழக்குகளுடன் தொடர்புடைய 69 பேர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.இவர்களில் 5 பேர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து 64 பேர் விளக்கமறியலில் வைகப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் குறித்த வெவ்வேறு இரு வழக்கு இலக்கங்களை கொண்ட 64 பேரும் நாட்டிலுள்ள பொலன்னறுவை, அனுதாரபுரம், கேகாலை, திருகோணமலை, போன்ற சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இவர்களை தற்போதைய தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் காரணமாக நீதிமன்றிற்கு அழைத்துவர முடியாததன் காரணமாக அவர்களை காணொளி தொழில்நுட்பத்தின் மூலமாக எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்

## 2 முகக்கவசங்களை அணியுங்கள்

அத்துடன், வீட்டை விட்டு வெளியே செல்லும் போது ‘பேஸ் பீல்ட்’ முகக்கவசம் கட்டாயமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, வீட்டுக்கு அருகாமையில் உள்ள தடுப்பூசி செலுத்தும் சிகிச்சை நிலையத்துக்கு சென்று அங்கு வழங்கப்படுகின்ற தடுப்பூசியை உடனடியாக பெற்றுக் கொள்ளுமாறு பொதுமக்களை கேட்டுக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஒருசிலர் வெளிநாடுகளுக்கு செல்வதற்கு ஒவ்வொரு வகையான தடுப்பூசிகளை தேடிக்கொண்டு இருப்பதாகவும், வெளிநாட்டுக்கு செல்ல முன் யாருடைய உயிருக்காவது உத்தரவாதம் கொடுக்க முடியுமா என கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆகவே, கொரோனாவிலிருந்து தமது உயிர்களை பாதுகாத்துக் கொள்ளவது அவரவரது பொறுப்பாகும் என குறிப்பிட்ட அவர், மற்றவர்கள் முடிவெடுக்கும் வரை பார்த்துக் கொண்டிருக்காமல் சுகாதார வழிமுறைகளை உரிய முறையில் பின்பற்றி நடக்கும் படி அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அதுமாத்திரமன்றி, இந்தக் காலப்பகுதியில் அனைவரும் முடிந்தளவு வீடுகளில் இருப்பது தான் பாதுகாப்பானது என தெரிவித்த விசேட மருத்துவ நிபுணரான அவர், கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கு தனிமைப்படுத்தலில் இருப்பது மிகவும் முக்கியமானது எனவும் தெரிவித்தார்.

எனவே, கொரோனாவிலிருந்து பாதுகாப்பினை பெற சுகாதார அமைச்சின் ஐந்து முக்கியமான சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுமாறும் அவர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## இன்று விளக்கேற்றுங்கள்

ஐக்கிய மக்கள் சக்தி, நாட்டு மக்கள் அனைவரிடமும் இந்த வேண்டுகோளை விடுப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பிரிவு, அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

கோவிட் தொற்று பாரியளவில் நாடு பூராகவும் பரவியுள்ளது. இது வரையும் 440,000 நோயாளர் நாடளாவிய ரீதியில் இனங்காணப்பட்டுள்ளதோடு 9000 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

இந்த சந்தர்ப்பத்தில் வைத்தியசாலைகளிலும் வீடுகளிலும் சிகிச்சை பெற்று வருகின்ற கோவிட் தொற்றாளர்கள் குணமடைய வேண்டும்.

அவர்களுக்குத் தேவையான சிகிச்சைகளை வழங்கி கோவிட் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்ற வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் உள்ளிட்ட சுகாதார ஊழியர்கள், பொதுச் சுகாதார அதிகாரிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும், ஆசிர்வதிப்பதற்கான சந்தர்ப்பமாகவும் இதனைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

எனவே பொதுமக்கள் அனைவரும் உளத் தூய்மையுடனும், ஒரே எண்ணத்துடனும், ஈடுபடுவதன் மூலம் நாட்டில் தொற்றியுள்ள, கோவிட் தொற்றிலிருந்து பாதுகாப்பைப் பெற அழைப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.எம்.மரிக்கார், மனுஷ நாணாநயக்கார ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

## புதிய திட்டத்தை பரீட்சிப்பதற்காக விவசாயிகளின் தலையில்

மாவட்ட விவசாய சம்மேளனத்தின் தலைவர் நடேசன் சுந்தரேசன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

விவசாயிகளுக்கு இருக்கின்ற பிரச்சனைகள் போதாதென்று மேலும் ஒரு புதிய பிரச்சனையை அரசாங்கம் தற்போது உருவாக்கியிருக்கின்றது.

எமது விவசாயிகளது களஞ்சியசாலைகளில் மேலதிகமாக களஞ்சியப்படுத்தியிருக்கின்றார்கள் என கூறி அவர்களது களஞ்சியசாலைகளை சீல் வைத்திருப்பதென்பது ஜனநாயக முறைக்கு முற்றிலும் மாறுபட்ட செயலாகவே நாம் கருதுகின்றோம்.

விவசாயிகள் தானும் தனது உறவினர்களும் பெற்றுக்கொண்ட விளைச்சலை ஒரு இடத்தில் களஞ்சியப்படுத்தி அடுத்த போகத்திற்கு முதலீடாக இதனை பயன்படுத்தலாம் என நினைத்து களஞ்சியப்படுத்தியிருக்கின்றார்கள். இதற்கு விதிவிலக்காக அரசு செயற்படுவது எமக்கு வேதனையாக இருக்கின்றது.

இப்படியான செயற்பாட்டினை மேற்கொள்வதன் ஊடாக விவசாயிகளாகிய நாங்கள் மிகவும் பின்னோக்கிய நிலைக்கு தள்ளப்படுகின்றோம்.

அரசாங்கம் தற்போதே தீர்மானித்துவிட்டது அரிசியை பாக்கிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்வதென்று. இதனூடாக பாக்கிஸ்தான் விவசாயிக்கு பால் எமது விவசாயிகளுக்கு பழஞ்சோறு எனும் நிலையில் அரசாங்கம் இருந்தால் எமக்கு ஒன்றுமே செய்ய முடியாது.

அரசின் செயற்திட்டங்கள் நல்லதாக இருந்தாலும் கூட இந்த கொரோனா காலகட்டத்தில் இவ்வாறான செயற்திட்டங்களை செயற்படுத்தி அதனை குழப்பியடுத்து, நாட்டை பின்னோக்கி கொண்டு செல்லாதீர்கள். இந்த விவசாயிகளின் விளைச்சல்தான் எமக்கு உணவு, முதலாளித்துவ பாக்கிஸ்தான் அரசாங்கத்திடம் இருந்து ஒரு முடிவு வராது, உங்களுக்கு என்று ஒரு அரசாங்கத்தை நீங்கள் நிறுவும் வரை இந்த அரசாங்கத்திற்கு நல்லதொரு விடிவுகாலம் இல்லை.

சேதனைப்பசளை திட்டம் என்பது ஒரு நல்ல திட்டம், ஆனால் அந்த திட்டத்தை அமுல்படுத்துவதற்கு உரிய காலம் இது அல்ல, சேதனைப்பளை இல்லாத இந்த வேளையில் 20 மூடைக்கு மேல் விளைச்சலைப் பெற முடியாது. ஆனால் இரசாயண பசளை மூலம் 40 மூடை விளைச்சலைப் பெற்றிருக்கின்றோம். ஆனால் இந்த சேதனைப்பசளை திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான காலம் இது அல்ல உங்களுக்கு ஏதாவது திட்டம் இருந்தால் திட்டத்தை பரிட்சித்துப்பார்ப்பதற்கு விவசாயியின் தலையில் மிளகாய் அரைக்க வேண்டாம். கொரோனாவில் இருந்து நாம் மீண்டதன் பின்புதான் புதிய புதிய திட்டங்களை கொண்டுவர முடியும் என்றார்.

## புதிய அரசியலமைப்பு சிங்கள பௌத்த

புதிய அரசியலமைப்பின் உருவாக்கத் தேவை தொடர்பாக வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

1972 மற்றும் 1978 ஆம் ஆண்டுகளில் கொண்டு வரப்பட்ட அரசியல் சாசனங்கள் தமிழ்மக்களின் ஒப்புதல் இன்றியே கொண்டுவரப்பட்டது. குறிப்பாகக் கூறுவதாக இருந்தால் தமிழ் பிரதிநிதிகள் அரசியல் சாசன வரைபுகளில் பங்குதாரர்களாக இருந்ததில்லை.

கோத்தாபய அரசாங்கம் தன்னை ஒரு சிங்கள பௌத்த அரசாங்கமாக காட்டிக்கொள்வதிலேயே பெருமையடைகிறது. இவ்வாறானவர்கள் உருவாக்கும் அரசியல் சாசனம் எவ்வாறு அமையும் என்பதை யாரும் கூறி நாம் அறிய வேண்டியதில்லை. ஜனாதிபதியினுடைய ஒவ்வொரு செயற்பாடுகளும் இந்த நாடு எதனை நோக்கி செல்கிறது என்பதனை வெட்ட வெளிச்சமாக காட்டி நிற்கிறது.

சிவில் நடவடிக்கைகளில் ராணுவ தளபதிகளின் நியமனங்கள், தமிழ் பிரதேசங்களில் சிங்கள பௌத்த பிக்குகளையும் பேரினவாதிகளையும் உள்ளடக்கிய தொல்லியல் செயலணி போன்ற நடவடிக்கைகளைப் பார்க்கின்ற பொழுது புதிய அரசியல் சாசனம் என்பது இலங்கை, பல்லின மத மொழி கொண்ட நாடு என்று ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் உருவாக்கப்படுமா என்ற கேள்வி எழுகின்றது.

ஏனைய தேசிய இனங்களுக்கான இறையாண்மையை ஏற்றுக்கொண்டு இந்த நாட்டினுடைய சகல பிரஜைகளையும் சமத்துவமாக மதித்து ஓர் அரசியல் சாசனத்தைக் கொண்டு வந்தால் அது ஓர் அர்த்த புஸ்டியுள்ள செயற்பாடாக அமையும். ஆனால், இந்த அரசாங்கம் அவ்வாறு செய்யாது என்பது வெளிப்படை.

இவ்வாறான சூழ்நிலையில் ஒரு புதிய அரசியல் சாசன செயற்பாடுகள் தொடர்பாக வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து சரியான நிலைப்பாடுகளுடன் செயற்படுவதானது விரும்பத்தக்கதும் அறிவுபூர்வமானதாகவும் இருக்கும் என்றார்.

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
MATHE மட்டுமல்ல
Deutsch, Franzósisch, Englisch,Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

## சிங்கள மயமாக்கல், தமிழர்களின் நிலங்களை பறிக்கின்ற

உடனடியாக நிறுத்தும்படி கூறியதுடன் வேலை செய்துகொண்டு இருந்தவர்களுக்கு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கவனத்திற்கு அம்மக்கள் கொண்டு சென்றுள்ளனர்.

அது தொடர்பாக இன்றையதினம் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் சம்பவ இடத்திற்கு நேரடியாக விஜயம் செய்துள்ளார்.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிடுகையில்,

இங்கே இருக்கின்ற மக்கள் அவர்களுடைய ஒரே ஒரு வாழ்வாதாரமாக இந்த விவசாயத்தைத்தான் நம்பியே இருக்கின்றனர்.

தற்போது இலங்கை அரசாங்கமானது நாகர் காலத்துத் தமிழர்களின் வரலாற்று தொன்மையுடைய குருந்தூர் மலையை தனக்கு சொந்தமாக்கும் நடவடிக்கையின் அடுத்த கட்டமாக குருந்தூர் மலை சூழ இருக்கின்ற தமிழர்களுடைய பூர்வீக நிலங்களை அபகரிக்கின்ற செயல்பாட்டை முன்னெடுத்து வருவதாகவே வனவள திணைக்களத்தின் மற்றும் பௌத்த மதகுருவின் நடவடிக்கை இருக்கிறது. இது தொடர்பாக வனவள திணைக்கள அமைச்சருடன் தொடர்பு கொள்ள முற்பட்டபோது அவர் தற்பொழுது வெளிநாடு சென்றுள்ளதாகக் கூறப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரை இது தொடர்பாகக் கேட்டபோது நில அளவை திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் தற்பொழுது வயல் செய்கின்ற மக்கள் விவசாயம் செய்கின்ற நிலங்களை அளவீடு செய்து இரண்டு மூன்று தினங்களுக்குள் தன்னிடம் ஒப்படைக்கும்படி அதன் பிற்பாடு அவர் வனவள அமைச்சருக்கு ஒரு கடிதத்தை எழுதி எனக்கும் அதில் ஒரு பிரதி அனுப்புவதாகக் கூறியிருந்தார்.

உண்மையில் இந்த செயல்பாடு என்பது தற்போது நாட்டில் கோவிட் தொற்று காரணமாக மக்கள் வீடுகளில் முடங்கிக் கிடக்கின்ற இந்த சூழ்நிலையில் சிங்களமயமாக்கல் தமிழர்களுடைய நிலங்களைப் பறிக்கின்ற செயல்பாடு மிகத் தீவிரமாகப் பல இடங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அந்த நடைமுறை இன்னொரு வடிவம்தான் இந்த இந்த குருந்தூர்மலை தண்ணிமுறிப்பு விவசாய நிலங்களை பௌத்தமத குருவின் உதவியுடன் வனவள திணைக்களம் ஆக்கிரமிக்க நினைக்கும் செயல்பாடு.

இது முற்று முழுதாக எமது இனத்துக்குச் செய்கின்ற மிகப் பெரிய துரோகம். அரசாங்கம் மற்றும் அரசாங்கத்தில் இருக்கின்ற உயர்பதவிகளில் இருக்கின்ற அதிகாரிகள் அமைச்சர்கள் இதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

இந்த செயல்பாட்டின் மூலமாக இங்கு இருக்கின்ற மக்களுடைய வாழ்வாதாரத்தை முற்று முழுதாக பாதிக்கப்படும். இது தொடர்பான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும் இந்த மக்களைத் தொடர்ச்சியாக விவசாயம் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன் என தெரிவித்துள்ளார்.

## விடுதலைப்புலிகள் அமைப்பின் மீதான தடையை தொடர

தடைசெய்யப்பட்ட அமைப்புக்களின் மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் தீர்ப்பைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட உள்துறைச் செயலாளரின் தீர்மானமானது, ஐக்கிய இராச்சியத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தடையை நீக்குமாறு கோரிக்கை விடுத்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பொன்றின் விண்ணப்பத்தை நிராகரிக்கின்றது.

எனவே, ஐரோப்பிய ஒன்றியப் பிராந்தியம் உட்பட உலகெங்கிலும் உள்ள ஏனைய 30க்கும் மேற்பட்ட நாடுகளைப் போலவே, தமிழீழ விடுதலைப் புலிகள் ஐக்கிய இராச்சியத்திலும் ஒரு தடைசெய்யப்பட்ட அமைப்பாக விளங்குகின்றது.

பொதுமக்கள் மற்றும் ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை இலக்கு வைத்த கொடூரங்கள் மற்றும் அட்டூழியங்கள், உலகளாவிய மற்றும் பிராந்தியப் பாதுகாப்பை பாதிக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் ஏனைய குற்றச் செயல்களில் ஈடுபடுதல் ஆகியவற்றின் காரணமாக இந்த நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஆரம்பத்தில் தடை செய்யப்பட்டது.

உலகளாவிய ரீதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தடையை தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்வதானது, சர்வதேச வலையமைப்பின் மூலம் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதியுதவியளித்தல், வன்முறைத் தீவிரவாதத்தை நோக்கி இளைஞர்களை தீவிரப்படுத்துதல், இன ஒற்றுமையை சீர்குலைத்தல் மற்றும் அவர்கள் செயற்படும் ஒவ்வொரு நாட்டிலும் ஒருங்கிணைந்த வாழ்க்கையை சீர்குலைத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடும் குறித்த அமைப்பின் எஞ்சிய நபர்களால் தொடர்ந்தும் ஏற்படுத்தப்படும் அச்சுறுத்தலை எதிர்ப்பதனை அங்கீகரிப்பதாகும்.

பயங்கரவாதத்திற்கு எதிரான உலகளாவிய போராட்டத்தில் ஐக்கிய இராச்சியம் மற்றும் அனைத்து அரசாங்கங்களுடனான கூட்டுறவை இலங்கை அரசாங்கம் பாராட்டுவதுடன், குடிமக்களின் உயிருக்கு அச்சுறுத்தலையும், உலகளாவிய மற்றும் பிராந்திய அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு ஆபத்தையும் விளைவிக்கும் பயங்கரவாதம் மற்றும் வன்முறைத் தீவிரவாதத்தைத் தணிப்பதற்கான அனைத்து முயற்சிகளிலும் ஐக்கிய இராச்சியத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கு உறுதிபூண்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

# மின்னல் தாக்கியதில் மூன்று பிள்ளைகளின் தந்தை பலி

(வடமராட்சி)

மின்னல் தாக்கியதில் மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலி நாவல்காட்டு பகுதியில் நேற்று வியாழக்கிழமை(02) பிற்பகல் இடம்பெற்ற சம்பவத்தில் பருத்தித்துறை இ.போ.ச சாலையில் சாரதியாக பணியாற்றிவரும் நாவற்காடு பகுதியை சேர்ந்தவரும் அல்வாய் பகுதியில் திருமணம் செய்து வசித்து வசிப்பவருமான தியாகராசா மதனபாலன் (வயது 43) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நேற்று(02) பிற்பகல் வயல் உழுது கொண்டிருந்த போது மழை பெய்ததாகவும் அப்போது உழவு இயந்திரப் பெட்டிக்கு கீழ் பகுதியில் ஒதுங்கி இருந்த போது மின்னல் தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் அவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்த நிலையில யாழ் .போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். உயிரிழந்தவரின் சடலம் அச்சுவேலி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிண்ணியா ஆதார வைத்தியசாலைக்கு சஜித் பிரேமதாசவினால் அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் வழங்கி வைப்பு




(எம்.முபாரக்)

திருகோணமலை கிண்ணியா ஆதார வைத்தியசாலைக்கு எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவினால் முப்பது இலட்சத்து முப்பது ஆயிரம் (3,030,000) ரூபா பெறுமதியான அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் வைத்தே இந்த உபகரணங்கள் கிண்ணியா தள வைத்தியசாலையின் அபிவிருத்தி குழு சார்பாக குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி Dr. அஜித் பெற்றுக்கொண்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் 'எதிர்க்கட்சியிலிருந்து ஒரு மூச்சு' எனும் நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஒருங்கிணைவாக ஆரோக்கியமான நாட்டைக் கட்டியொழுப்பும் நோக்கில் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவினால் நாடுபூராவும் நடைமுறைப்படுத்தும் 'ஜன சுவய' கருத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சமூக நலத்திட்டத்தின் 24ஆவது கட்டமாக உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. இதன் பிரகாரம் இரண்டு இலட்சத்து எழுபத்தி ஐயாயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த Multiple Monitors உபகரணங்கள் இரண்டும், பன்னிடரண்டு இலட்சத்து நாப்பது ஆயிரம் ரூபா பெறுமதியான Optiflow Nasal Therapy உபகரணங்கள் இரண்டும் இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டன.

கொரோனா பெருந்தொற்று காரணத்தால் பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்களுக்கு சுகாதார ரீதியாக நிவாரணங்களை வழங்கும் பொருட்டு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் குழு, அமைப்பாளர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் வெளிநாட்டுக் கிளைகள், உள்நாட்டு வெளிநாட்டு ஆதரவாளர்கள் 'ஜன சுவய' கருத்திட்டத்தில் இணைந்து கொண்டு 'எதிர்க்கட்சியிலிருந்து ஒரு மூச்சு' நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றனர்.

இதற்கு முன்னர் 23 கட்டங்களில் 68,874,000 ரூபா பெருமதியான வைத்தியசாலை உபகரணங்களை ஐக்கிய மக்கள் சக்தியால் வழங்கி வைக்க முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

# வல்வெட்டித்துறை நகர சபைத் தவிசாளரைத் தேரிவு செய்யும் கூட்டம் ஒத்தி வைப்பு

(எஸ் தில்லைநாதன்)

வல்வெட்டித்துறை நகர சபைத் தவிசாளரைத் தெரிவு செய்யும் கூட்டம் கோரம் இன்மையால் காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி நகர சபையின் தவிசாளராக கடமையாற்றிய கோ.கருணானந்தராசா அண்மையில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்திருந்தார்.

இந்நிலையில் நகரசபைத் தவிசாளரை தெரிவு செய்வதற்காக கூட்டம் நேற்று வியாழக்கிழமை(02) காலை 10.00 மணியளவில் சபா மண்டபத்தில் இடம் பெற்றது.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ்சன் தலைமையில் கூட்டம் ஆரம்பமான போது சுயேட்சை குழு உறுப்பினர்கள் மூவரும், ஈபிடிபி கட்சி உறுப்பினர்கள் இருவருமாக ஐவர் மாத்திரமே கலந்து கொண்டனர்.

போதிய உறுப்பினர்கள் இன்மையால் அமர்வு 30 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட போதும் அதே நிலமை காணப்பட்டது.

17 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் ஐவரைத் தவிர எஞ்சிய உறுப்பினர்களான த.தே.கூ , த.தே.ம.மு, த.வி.கூ , ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, ஆகியவற்றின் உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை.

# சதோச விற்பனை நிலையத்தை நிரந்தரமாக மூடியதால் அத்தியவசிய போருட்களை பேறுவதில் மக்கள் அவதி

(ஹஸ்பர் ஏ ஹலீம்)



திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 96 ம் கட்டை பகுதியில் இரு வருடங்களுக்கு முன்னர் அமையப்பெற்ற சதொச விற்பனை நிலையம் மூடப்பட்டதால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போதைய நிலையில் அத்தியவசிய பொருட்களின் விலை ஏற்றம் காரணமாகவும் சில்லறை கடைகளில் பொருள் இல்லாமை காரணமாக பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர். சீனியின் விலை 220 ரூபா வரை அதிகரித்துள்ளது இதனை சதொச விற்பனை நிலையத்தில் 130 ரூபா உள்ள நிலையில் இங்குள்ள சதொசாவை மூடியதன் காரணமாக அத்தியவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடும் விலையும் உயர்ந்துள்ளது. இதனால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு கஷ்டங்களை எதிர்நோக்கவேண்டியதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். இரு வருடங்களுக்கு முன்னர் சதொச விற்பனை நிலையம் இருந்தும் அதனை மூடியதன் மர்மம்தான் என்ன என மக்கள் அங்கலாய்க்கின்றனர். சதொசா நிலையத்துக்கு செல்ல வேண்டுமாக இருந்தால் சுமார் 30 கிலோமீற்றர் திருகோணமலை நகருக்கு செல்ல நேரிடுவதாகவும் மேலும் தெரிவிக்கின்றனர்.

எனவே குறித்த பகுதிக்கு சதொச விற்பனை நிலையத்தை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் உரிய அதிகாரிகளுக்கு பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஜீவன் தோண்டமானுக்கும் தமிழக முதலமைச்சருக்கும் இடையே சந்திப்பு




(தலவாக்கலை பி.கேதீஸ்)

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமானுக்கும் இடையில் முக்கிய சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது. இராஜாங்க அமைச்சரின் இந்தியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் போது இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த சந்திப்பின் போது தமிழ் நாட்டிற்கும் இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்கள் செறிந்துவாழும் மலையகத்திற்கும் இடையிலான இருதரப்பு பரஸ்பர உறவுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும் மலையகத்திற்கான அபிவிருத்தி பணிகள் குறித்தும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது. இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சரை சந்தித்து கலந்துரையாடினேன். இதன்போது நீண்ட நாள் அரசியல் போராட்டங்களுக்கு மத்தியில் இலங்கையில் மலையகத்திற்கான தனியான பல்கலைகழகம் அமைப்பதற்கான அனுமதியை இலங்கை அரசாங்கம் வழங்கியுள்ளமையை தமிழ் நாட்டு முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவந்தேன். மேலும் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து தமிழ் நாட்டில் வாழும் இலங்கை தமிழ் மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செய்வதற்கு தமிழ் நாட்டு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அண்மையில் இந்திய சட்டபேரவையில் அறிவித்திருந்தார்.

அதனடிப்படையில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்கு வீடமைப்பு, கல்வி, தொழில் வாய்ப்புகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள், தொடர்பான நலத்திட்டங்களை அவர் அறிவித்திருந்தார். இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வாழும் அம்மக்களுக்கு அறிவித்துள்ள இந் நலத்திட்டங்களுக்கு நன்றிகளையும், பாராட்டுகளையும் இச்சந்திப்பின் போது தெரிவித்ததோடு இத் திட்டங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்திடம் பரிந்துரைப்பதாகவும் தமிழ் நாட்டு முதலமைச்சரிடம் தெரிவித்தேன்.

அது மாத்திரமன்றி 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் மலையக தமிழர்களுடைய பிரஜா உரிமையானது பறிக்கப்பட்டது. அவ்வாறு பறிக்கப்பட்ட பிரஜா உரிமையானது 30 வருடங்களின் பின்னர் எங்களுடைய மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களினால் பெற்றுக்கொடுக்கப்பட்டது என்பதனையும் நினைவுக்கூறினேன். அத்துடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மறைந்த தலைவர்களான அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான், அமரர் ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் தமிழ் நாட்டின் திராவிட முன்னேற்ற கழகத்தின் மறைந்த தலைவர் கலைஞர் முத்துவேல் கருணாநிதியுடன் பேணி வந்த உறவு மற்றும் தற்போதைய முதலமைச்சர் மாண்புமிகு மு.க ஸ்டாலினுடன் பேணி வரும் நெருக்கமான உறவு தொடர்பிலும் இச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்திய வம்சாவழி மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸிற்கும் திராவிட முன்னேற்ற கழகத்திற்கும் இடையிலான உறவு நீடிக்கும் எனவும் தெரிவித்தேன். இதன் மூலம் இந்திய அரசாங்கத்தின் பல்வேறு அபிவிருத்திகள் மலையக மக்களுக்கு வந்தடையும் எனவும் நம்பிக்கை கொள்கின்றேன் என்றார்.

# திருகோணமலையில் ஊரடங்கு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட வர்த்தகர்கள் உட்பட 11 பேர் கைது





(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

நாட்டில் ஊரடங்கு சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ள நிலையில் திருகோணமலை உப்புவெளி பிரதேசத்தில் ஊரடங்கு சட்டத்தை மீறி அனுமதிப்பத்திரமின்றி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட வர்த்தகர்கள் உட்பட 11 பேரை கைது செய்துள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று வியாழக்கிழமை உப்புவெளி பொலிசாரினால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே இவ்வாறு 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் ஊரடங்கு சட்டத்தை மீறி வர்த்தக நிலையங்களை திறந்து வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாமல் விற்றபனை செய்ததாகவும் மற்றும் குறைந்த பட்சவாடிக்கையாளர்களுக்கும் அதிகமானவர்கள் பொருட்கள் கொள்வனவில் ஈடுபட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக ஊரடங்கு சட்டத்தை மீறியமை,சுகாதாதார நடைமுறையினை பின்பற்றாமை போன்ற குற்றங்களின் கீழ் வழக்கு பதிவு செய்யப்டுள்ளதாகவும் உப்புவெளி பொலிசார் தெரிவித்தனர்.

மேலும் இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் இன்றைய தினம் திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு சட்டத்தை மதித்து இவ் கொரோனா ஒழிப்பு செயட்பட்டிட்ற்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு வழங்குமாறு திருகோணமலை உப்புவெளி பொலிசார் வேண்டுகோள் விடுகின்றனர்.

# ஆலய புனரமைப்புக்கு 38 மில்லியன் நிதி ஒதுக்கீடு

(தலவாக்கலை பி.கேதீஸ்)



நுவரெலியா மாவட்டத்தில் காணப்படும் தெரிவு செய்யப்பட்ட 35 ஆலயங்களின் புனரமைப்பு வேலைத்திட்டத்திற்கு 38 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்;

அரசாங்கத்தின் கொள்கை சுபீட்சத்தின் நோக்கு என்ற வேலைத்திட்டத்திற்கு அமைய பிரதமரும் புத்தசாசன மற்றும் மதவிவகார காலாச்சார அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலில் ஆலயங்களை புனரமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இந்து ஆலயங்கள் புனரமைக்கப்படவுள்ளன. தோட்ட வீடமைப்பு சமூக உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் இது தொடர்பில் ஆலோசனை வழங்கியிருந்தார். அந்தவகையில் நுவரெலியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆலயங்களின் புனரமைப்புக்கு தலா 38 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்தவகையில் நுவரெலியா, கொத்மலை, அம்பகமுவ பிரதேச செயலகத்துக்கு குறித்த நிதி ஒதுக்கீட்டு காசோலைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த பிரதேச செயலகத்தின் குறித்த பகுதியின் இந்து கலாச்சார திணைக்களத்திற்கு குறித்த நிதி அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.


Sj
SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

## 6 சக்கர நாற்காலிகளை வைத்தியசாலைக்கு நன்கொடையாக வழங்கிய வைத்தியர்



(வி.சுகிர்தகுமார்)

பிரதேசத்தின் கோவிட் - 19 தொற்றைத் தொடர்ந்து அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் அத்தியாவசிய தேவைப்பாடுகளை அறிந்து பலரும் தங்களால் இயன்ற உதவிகளையும் பங்களிப்புகளையும் வழங்கி வருகின்றனர்.

அந்த வகையில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் வைத்தியராகக் கடமையாற்றி வரும் வைத்தியர் . நிமாஷா ஜேர்மனியில் வசிக்கும் தனக்கு அறிமுகமான ஒரு நண்பியூடாக 06 சக்கர நாற்காலிகளை வைத்தியசாலைக்கு நன்கொடையாக இன்று வழங்கி வைத்தார்.

வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.எச்.எம். அசாத் தலைமையிலான குழுவினர் அதனைப் பெற்றுக் கொண்டனர்

## பணிப்பாளர் நாயகமாக கடமை பொறுப்பேற்பு



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றி அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை அமைச்சின் பணிப்பாளர் நாயகமாக பதவி உயர்வுடனான இடமாற்றம் பெற்றுச்சென்ற கே.பரமேஸ்வரன் (01) கொழும்பில் உள்ள அமைச்சின் செயலாளரிடம் இருந்து நியமனத்தை பெற்றுக்கொண்டதுடன் கடமைகளையும் பொறுப்பேற்றுக்கொண்டார்.

## இராணுவத்தின் 1500 அஸ்ட்ரா செனிக்கா தடுப்பூசிகள் கல்முனைக்கு



(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை இராணுவத்தின் ஏற்பாட்டில் 1500 அஸ்ட்ராசெனிக்கா தடுப்பூசிகள் எமது கல்முனைப்பிராந்தியத்திற்கு கிடைத்துள்ளன. அவற்றை இன்னும் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத 60வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வழங்க உத்தேசித்துள்ளோம்.

என்று கல்முனைப் பிராந்திய சுகாதாரசேவைபணிப்பாளர் டாக்டர் குண.சுகுணன் தெரிவித்தார்.கல்முனைப்பிராந்தியத்தில் சமகால கொவிட் நிலைமை பற்றிமேலும் கூறுகையில்:

எமது கல்முனைப்பிராந்தியத்தில் இதுவரை 5000பேரளவில் இன்னும் எந்தவொரு தடுப்பூசியையும் பெற்றுக்கொள்ளாமல் இருக்கின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் 60வயதுக்கு மேற்பட்டவர்களாவர்.

அப்படிப்பட்டவர்கள் தத்தமது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் தமது பெயர்களை பதிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஐரோப்பிய நாட்டு கம்பனிகளால் தயாரிக்கப்பட்டு ஜப்பான் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்த அஸ்ட்ராசெனிக்கா தடுப்பூசி இரண்டு தடுப்பூசிகளும் கிடைக்கப்பெற்றுள்ளதால அச்சமின்றி இதனைப்பெறலாம்.

எமக்கு முதலில் கிடைத்த தடுப்பூசிகளைக்கொண்டு முதலாவது டோஸ் இதுவரை 96.33வீதமானோர்களுக்கு ஏற்றியுள்ளோம்.இரண்டாவது டோஸ் கடந்த 3நாட்களில் 47.42வீதமானோருக்கு ஏற்றப்பட்டன.

மீதி 50வீதமானோருக்கான இரண்டாவது தடுப்பூசி அடுத்தவாரமளவில் வழங்கமுடியும். எதிர்வரும் 4ஆம் திகதி நாட்டுக்கு ஒருதொகுதி சினோபாம் ஊசிகள் வருகின்றன.

இதேவேளை கல்முனை பிராந்தியத்தில் கடந்த 24 மணிநேரத்தில் 64 தொற்றாளர்கள் உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் இரண்டு மரணங்கள் பதிவாகியுள்ளது. இறுதியாக பொத்துவில் கல்முனை ஆகிய பிரதேசங்களில் 70வயது ஆணொருவரும் , 59வயது பெண்ணொருவரும் மரணித்துள்ளனர். இதுவரை மொத்தமாக 147 மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

எதுஎப்படியிருப்பினும் இம்மாதம் நிறைவுறும் நேரம் எமது பிராந்தியத்தில் கொவிட் மரணத்தை பூச்சியமாக்கவுள்ளோம்.

எனவேபொதுமக்கள் நிலைமையினை புரிந்துகொண்டு மிகவும் கவனமாக சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நடக்க வேண்டும் . அமுல்படுத்தப்பட்டுள்ள பொது முடக்கத்தின் அவசியத்தை உணர்ந்து நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் .

## கூட்டமைப்பு கடந்த காலத்தில் தீர்வுக்காக முன்வைத்துள்ள அதே விடயங்களையே மீளவும் முன் வைப்பதில் எவ்வித பயனுமில்லை

### கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஹென்றி மகேந்திரன்



(துறையூர் சஞ்சயன்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் பேசுவதில் தவறில்லை. ஆனால் கூட்டமைப்பு கடந்த காலத்தில் தீர்வுக்காக முன்வைத்துள்ள அதே விடயங்களையே மீளவும் முன் வைப்பதில் எவ்வித பயனுமில்லை என தமிழீழ விடுதலை இயக்கத்தின் உப தலைவரும் கல்முனை மாநகர சபை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் தற்போதைய கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஹென்றி மகேந்திரன் தெரிவித்தார்.

ஒவ்வொரு ஆட்சியிலும் அரசியல் தீர்வு பேச்சுவார்த்தை நடக்கிறதே தவிர எதுவும் இடம்பெற்றதாக தெரியவில்லையே என வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளின் ஊடாக மக்களின் வாழ்வாதாரம் உள்ளிட்ட வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் அதே வேளை அதிகாரப் பகிர்வு குறித்த அடுத்த நகர்வுக்கு செல்லவும்

வேண்டும். போராடிக் கிடைத்த உரிமைகளைப் பொருட்படுத்தாமல் மத்தியரசின் கீழ் செல்ல வேண்டுமென சிந்திப்பது, 13 ஆவது சட்ட திருத்தத்திற்கு புறம்பான செயற்பாடாகும்.

தேசிய பாடசாலைகள் என்ற பெயரிலும் வைத்தியசாலைகளைத் தரமுயர்த்துதல் என்ற பெயரிலும் மாகாண சபைகளின் அதிகாரங்கள் பறிக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படுவதுடன், நகர அபிவிருத்தி அதிகார சபை நகர விரிவாக்கம் என்ற பெயரில் உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்கள் பறிக்கப்படுவதும் நிறுத்தப்படல் வேண்டும்.

தேசிய அரசாங்கத்துக்குரிய மாகாணத்துக்குரிய பாடசாலைகள், வைத்தியசாலைகள், வீதிகள், நீர்ப்பாசனத் திட்டங்கள், மீன்பிடி கடல் சார் என இலங்கையிலுள்ள ஒவ்வொருதுறையும் தரம் பிரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக வடக்கு கிழக்கில் சிறுபான்மைக்குள் சிறுபான்மையாக இருக்கின்ற ஒரு பிரிவினர் மாகாண சபை துறைகளிலுள்ள அபிவிருத்தி வளங்கள் பற்றாக்குறையாக இருக்கின்றன என்றடிப்படையில், தேசிய அரசாங்கத்துக்குரிய துறைகள் கூடிய வளஅபிவிருத்தியை கொண்டுள்ளதாக கருதுகின்றனர்.

மத்திய அரசாங்கத் துறைகள் கூடிய வள அபிவிருத்தியை பெற்றுள்ளதனால் மாகாண சபைத் துறைகளுக்கு மாகாண சபையினால் வளங்களை பகிர முடியாத நிலையில், மாகாண சபை வளத்தைக் கொண்டு உச்ச நிலைக்கு முயற்சிக்கிறபோது இரு துறைகளுக்குமானஏற்றத்தாழ்வு வரும்போதுதான் பாடசாலை, வைத்தியசாலை உட்பட பல்வேறு துறைகள் மத்தியரசின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் என்ற கோரிக்கை மக்கள் மத்தியில் இருந்து எழுகின்றன. ஆகவே மத்திய அரசாங்கத்தின் வளங்களுக்கேற்ப மாகாண சபையின் வளங்களும் உயர்த்தப்பட வேண்டும்.

ஒரு சமூகம் கல்வி அறிவு ரீதியாக வளர்ச்சியடையும்போது பொருளாதார அபிவிருத்தியும் அறிவும் வளர்ச்சியடையும். அறிவு வளர்ச்சியடையும் போது தன்னுடைய இனத்தை பாதுகாக்கும் நோக்கில் வளர்ச்சியடைய முடியும். அதுவும் படித்த சமூகமாக வரும்போது

ஏனைய நன்மைகளும் கிடைக்கப்பெற்று வளங்களை காப்பாற்றிக் கொள்வார்கள். வெளியில் இருந்து வருகின்ற ஆபத்தையும் தடுத்து நிறுத்தக்கூடிய கல்வியறிவுள்ள சமூகமாகவும் மாற்றமடையும்.

13ஆவது திருத்தச்சட்டம் ஒற்றையாட்சிக்குட்பட்ட அரசியல்தீர்வை முன்வைப்பதால் அதனைத் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக ஏற்றுக்கொள்ள முடியாது என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. இருப்பினும் அரசியலமைப்பில் இருக்கக்கூடிய 13 ஆம் திருத்தத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். அந்தச் செயற்பாடு இலங்கையரசாங்கத்தின் நல்லிணக்க நடவடிக்கையை மேலும் வலுப்படுத்தும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நடைமுறைச் சாத்தியமான 13 ஆவது திருத்தச் சட்டத்தினை முறையாக முழுமையாக நடைமுறைப்படுத்தும் படியும் மாகாண சபைகளுக்கான தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டுமென்றும், அரசாங்கத்தை வலியுறுத்துவதுடன் இனப்பிரச்சினைக்குரிய நிரந்தர தீர்வான சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வினை ஏற்படுத்த வேண்டும் என அரசாங்கத்தைக் கோர வேண்டும் என்றார்.

## கல்முனை பிராந்தியத்தில் ஒதுக்கப்பட்ட தடுப்பூசிகள் மூன்றாம் நாளுடன் முடிந்தன

### எஞ்சியோருக்கு விரைவில் என்கின்றனர் சுகாதார அதிகாரிகள்



(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் கொவிட்-19 கொரோணா தடுப்பூசி நடவடிக்கைகளை கடந்த மூன்று தினங்களாக 4 நிலையங்களில் கிராம சேவகர் பிரிவு அடிப்படையில் மேற்கொண்டு வந்திருந்த நிலையில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலத்திற்கு கிடைக்கப்பெற்ற தடுப்பூசிகள் முடிவுற்ற நிலையில் சாய்ந்தமருதில் தடுப்பூசி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படமாட்டாது என சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம்.அல் அமீன் றிசாட் அறிவித்துள்ளார்.

அவரது அறிவித்தலில் சாய்ந்தமருது 6ம், 13 ஆம், 17 ஆம் பிரிவுகளுக்கான மற்றும் தடுப்பூசிகள் பெற தவறியவர்களுக்கான தடுப்பூசி நடவடிக்கைகள் மிக விரைவில் வழங்கப்படும் என்பதுடன் அதற்கான கால அட்டவணைகளும் எமது அலுவலகத்தினால் வெளியிடப்பட்டு பொது மக்களாகிய உங்களுக்கு அறிவிக்கப்படும். ஆகவே தடுப்பூசி பெற தவறியவர்களுக்கான தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் மிக அவசரமாக எதிர்வரும் தினங்களில் அறிவிக்கப்படும் என்பதுடன் தடுப்பூசிகளை பெறாதவர்கள் திகதி அறிவிக்கப்பட்டதுடன் பெற்றுக் கொள்ளுமாரும் கேட்டுக் கொள்கின்றேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கள் தொடக்கம் வியாழன் வரை 04 நாட்களுக்கு கிராம அலுவலர் ரீதியாக பிரிக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட தடுப்பூசி செலுத்தும் நிலையங்களில் தடுப்பூசி செலுத்தும் பணிகள் ஒழுங்கமைக்கப்பட்டு ஏற்பாடாகி தடுப்பூசி செலுத்தும் பணி புதன் கிழமை வரை இடம்பெற்று வந்த நிலையில் ,கிடைக்கப்பெற்ற தடுப்பூசிகள் முடிவடைந்த நிலையில் கல்முனை தெற்கு பிரிவில் மறு அறிவித்தல் வரை தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் இடம்பெறாது என்பதை பொது மக்களுக்கு அறியத்தருகிறேன் என சுகாதார வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம்.அஸ்மி தெரிவித்துள்ளார் இதே போன்றே நிலையே கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை பிரிவிலுள்ள பல சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களிலும் நிலவி வருகிறது.

## தடுப்பூசி ஏற்றலில் காரைதீவு சுகாதாரப்பிரிவு சாதனை

(வி.ரி.சகாதேவராஜா)



கல்முனைப்பிராந்தியத்திலுள்ள 13 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தடுப்பூசி ஏற்றலில் காரைதீவு பிரதேசம் சாதனை படைத்துள்ளது.

முதலாவது தடுப்பூசி 105.86 வீதமும் இரண்டாவது தடுப்பூசி 71.88வீதமும் ஏற்றி சாதனைபடைத்துள்ளது.

கல்முனைப்பிராந்தியத்தில் நேற்றுடன் நிறைவடைந்த 1லட்சம் இரண்டாவது தடுப்பூசி வழங்கும் திட்டத்தில் 13சுகாதாரப்பிரிவுகளுள் 71.88வீதம் செலுத்தி காரைதீவுப்பிரதேசம் முன்னணியிலுள்ளது. அதே வேளை 66.63வீதம் செலுத்தி ஆலையடிவேம்பு பிரதேசம் இரண்டாம் நிலையிலும் 62.74வீதம் செலுத்தி நிந்தவூர்பிரதேசம் மூன்றாம் நிலையிலுமுள்ளது.

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் டாக்டர் தஸ்ஸீமா வசீர் தலைமையிலான குழுவினரின் அர்ப்பணிப்பான சேவை காரணமாகவே இச்சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

இதையிட்டு காரைதீவு பிரதேசபைத்தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் முதல் இங்குள்ள பொதுநலஅமைப்புகள் வரை சுகாதாரடிவைத்தியஅதிகாரி டாக்டர் தஸ்லிமா குழுவினருக்கு பாராட்டையும் நன்றிகளையும் தெரிவித்துவருகின்றனர்.


அதே வேளை ஆலையடிவேம்பு பிரதேசம் முதல் டோஸில் அதிகூடிய 108.99 வீதமும் இரண்டாம் டோஸில் 66.63வீதமும் செலுத்தி சாதனை படைத்துள்ளது.

கிழக்கில் முதலாவது டோஸில் அதிகூடிய 95வீதத்தை கல்முனைப்பிராந்தியம் பூர்த்திசெய்து சாதனை படைத்துள்ளது. அதற்காக கல்முனைப் பிராந்திய சுகாதாரசேவைபணிப்பாளர் டாக்டர் குண.சுகுணன் தலைமையிலான குழுவினருக்கு சமுகவலைத்தளங்களில் பாராட்டுமழை பொழிந்தவண்ணமுள்ளன.

### கொரோனாவிற்கென 24 மணிநேர இலவச வாகன சேவை

## மாத்தளை மாநகரசபை முன்மாதிரி மேயர் பிரகாஸுக்கு பாராட்டு

(வி.ரி.சகாதேவராஜா)



கொரோனாத் தொற்றாளர்களை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்வதற்கென மாத்தளை மாநகரசபை இலவசமாக அம்புலன்ஸ் சேவை ஒன்றை ஆரம்பித்திருக்கின்றது.

மாத்தளை மாநகரசபை மேயர் சந்தனம் பிரகாஷ் மேற்கொண்டு துரித முயற்சி காரணமாக டொல்பின் வானொன்றை அம்புலன்ஸாக வடிவமைத்து இச்சேவையை 24 மணிநேரமும் நடத்தி வருகிறது.

இது தொடர்பில் மேயர் சந்தனம் பிரகாஷிடம் கேட்டபோது :

மாத்தளை மாநகர எல்லைக்குள் கொவிட் 19 தொற்றுக்குள்ளான தொற்றாளர்களை அவசர நிலைமைகளின் போது சிகிச்சை நிலையங்களுக்கு அழைத்து செல்வதற்கு வாகன வசதியின்மையால் அசௌகரியத்துக்கு உள்ளாகிவந்தனர்.



இதற்க தீர்வுகாணுமுகமாக எமது சபையினால் இவ்விலவச வாகனசேவையை ஏற்படுத்தியுள்ளோம். இதற்கென ஆளணியினரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதனை கருத்திற்கொண்டு ,இவர்களுக்காக உதவி கரம் நீட்டுவதற்காக 24 மணித்தியால இலவச வாகன சேவையை வழங்குவதற்கு கடந்த 24ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அவசர தேவைக்கு 0710227227 க்கு தொடர்பு கொள்ளலாமென மேயர் சந்தனம் பிரகாஷ் தெரிவித்தார்.

இச்சேவையையிட்டு மக்கள் மிகுந்த பாராட்டைத் தெரிவித்து வருகின்றனர்.




# சிறுவர் மற்றும் பெண்களுக்கெதிரான துஸ்பிரயோக தடுப்பு தொடர்பில் மட்டக்களப்பில் விசேட கலந்துரையாடல்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)



சிறுவர் மற்றும் பெண்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் துஸ்பிரயோக தடுப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்ததல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் குறித்த கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளது.

இதன்போது உதவி மாவட்ட செயலாளர் அ.நவேஸ்வரன், சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தர் எம்.எம். எச்.நயிமுடீன், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தருக்கான மாவட்ட இணைப்பாளர் வீ.குகதாசன் மற்றும் நன்னடத்தை அலகுப் பொறுப்பதிகாரிகள், மாவட்ட சிறுவர் பெண்கள் பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி, நன்னடத்தை உத்தியோகத்தர்கள் தேசிய

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு

உத்தியோகத்தர், உள சமூக உத்தியோகத்தர், மற்றும் உளவளத்துணை மாவட்ட இணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலின் போது தற்போதைய அவசர சூழ்நிலையின் நிமிர்த்தம் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக ஏற்படக் கூடிய சிறுவர் துஸ்பிரயோகங்கள் மற்றும் வன்முறைகளை தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்குமான தடுப்பு பொறிமுறை ஒன்றினை உருவாக்கும் வகையில் பல்துறைசார் இவ்வணியினரின் கருத்துக்கள் பகிரப்பட்டதுடன்.

எதிர்காலத்தில் உரிய பல்துறைசார் அணியினர் அனைவரும் ஒன்றிணைந்து கிராம மட்டத்தில் இருந்து மாவட்ட மட்டம் வரை உள்ள தற்பேதைய பொறிமுறையினையும் அதேநேரம் பயனாளிகள் இலகுவாக அரச பொறிமுறையினை அணுகி தமது பிரச்சனைக்கான தீர்வினை பெற்றுக்கொள்ளும் வகையிலான குறுங்கால திட்டம் ஒன்றை உருவாக்கி செயற்படும் பொருட்டும் மாதம் ஒரு முறை இவ்வாறான கலந்துரையாடல்களை மேற்கொள்வது எனவும்தீர்மானிக்கப்பட்டது.

சிறுவர் பெண்கள் பாதுகாப்ப தொடர்பாக பிரதேச செயலகங்களின் சிறுவர் பெண்கள் அபிவிருத்திப்பிரிவு மாவட்ட சிறுவர் பெண்கள் பிரிவு மற்றும் நன்னடத்தை அலகுகளின் செயற்பாடுகள் தொடர்ந்து அரச சுற்று நிருபங்கள், சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய இடம் பெறுவதுடன் சிறுவர் பெண்களின் நலன் கருதி இப்பணிக் குழாமினரை மக்கள் அணுகி தங்களின் பிரச்சனைகள் அல்லது பராமரிப்பு, பாதுகாப்பு சார் நடவடிக்கைகள் குறித்துஆலோசனைகளை 1929 அவரச தொலைபேசி மூலமாகவும் அல்லது காரியாலய நாட்களில் நேரடியாகவோ பெற்றுக்கொள்ள முடியும் என்றதீர்மானங்களுடன் கூட்டம் நிறைவு பெற்றுள்ளது.

# கொரோனாவை ஒழிக்க தேவையான ஒத்துழைப்புக்களை எந்நேரமும் வழங்க தயாராக உள்ளோம்

## சாய்ந்தமருது தலைமை ஜும்மாப் பள்ளிவாசல் தலைவர்



(நூருள் ஹுதா உமர்)

நாட்டை கடுமையாக அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா பெருந்தொற்றை இல்லாதொழித்து இலங்கை மக்கள் இயல்பு நிலைக்கு திரும்ப பிராத்திப்பதுடன், பாதுகாப்பு படையினருக்கும், சுகாதார துறையினருக்கும் கல்முனை பிராந்தியத்தில் கொரோனா கட்டுப்பாட்டுக்கு எங்களின் ஊரின் சார்பில் எவ்வகையான ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டுமோ அவற்றையெல்லாம் முழுமனதுடன் வழங்க எப்போதும் தயாராக உள்ளோம் என சாய்ந்தமருது- மாளிகைக்காடு தலைமை ஜும்மாப் பள்ளிவாசல் தலைவர் ஏ. ஹிபதுல் கரீம் தெரிவித்தார்.

சாய்ந்தமருது, மாளிகைக்காடு ஜும்மாப்பள்ளிவாசலினால் முன்னெடுக்கப்படும் கொரோனா பெரும் தொற்று தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் பதாகைகள் காட்சிப்படுத்தும் செயற்திட்டம் புதன்கிழமை மாலை அவரது தலைமையில் ஜும்ஆ பள்ளிவாசல் முன்பாக முதல் பதாகை நிறுவப்பட்டு திறந்து வைக்கப்பட்டதுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். அமீன் றிசாத், சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் சனூஸ் காரியப்பர், அம்பாறை மாவட்ட உலமா சபை பிரதித்தலைவர் சட்டத்தரணி முஜீப், கல்முனை ராணுவப்படையணி பதில் பொறுப்பதிகாரி ரஞ்சன தேசப்பிரிய, சாய்ந்தமருது, மாளிகைக்காடு ஜும்மாப்பள்ளிவாசல் செயலாளர் அப்துல் மஜீத் ரோஷன், பள்ளிவாசல் நிர்வாகிகள், சாய்ந்தமருது பொலிஸ் நிலைய அதிகாரி ஆர்.பி. அபயகோன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

நாட்டில் தற்போது பரவலாக அச்சுறுத்தலை ஏற்படுத்தி இருக்கும் கோவிட் 19 பெரும் தொற்று குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் குறித்த பதாகைகள் பல இடங்களிலும் காட்சிப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாகரையில் பழங்குடியின மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள்

( எஸ்.எஸ்.அமிர்தகழியான்)



வாகரை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சுமார் 80 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் இன்று வழங்கி வைக்கப்பட்டது.

மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கொவிட் 19 வைரஸ் தொற்று பரவல் காரணமாக வாழ்வாதாரம் பாதிப்புக்குள்ளான நிலையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு நட்பு மட்டக்களப்பு இளைஞர்களின் நிதி உதவியின் கீழ் இந்த அத்தியாவசிய உலர் உணவுப்பொதிகளை மட்டக்களப்பு மாவட்ட ஆதிவாசிகளின் தலைவர் நல்லதம்பி வேலாயுதம் மற்றும் குஞ்சஞ்கல்குளம் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்களுடன் இணைந்து வழங்கி வைத்தனர்.

# வடமராட்சி கிழக்கு அம்பனில் வெடி பொருட்கள் மீட்பு

(வடமராட்சி நிருபர்)

வடமராட்சி கிழக்கு அம்பனில் விஷேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட தேடுதலின் போது வெடி பொருட்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

நேற்று (01) அம்பன் பகுதியில் வீடு ஒன்றில் கழிப்பறைக்கு குழி தோண்டும் போது வெடிபொருட்கள் சில தென்பட்டுள்ளன.

இதனையடுத்து அப்பணி நிறுத்தப்பட்டு பருத்தித்துறை பொலிஸருக்கு அறிவிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து விஷேட அதிரடிப் படையின் உதவியுடன் அப்பகுதி தோண்டப்பட்ட போது கிளைமோர் குண்டுகள் 4, ஆர்பிஜி குண்டுகள் 6, கைக்குண்டுகள் 38, கிளைமோர் சுவிட்ச் 6, என்பன மீட்கப்பட்டுள்ளன.

# கல்முனை ஆதார வைத்தியசாலையின் கொரோனா தடுப்பு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள்!

(காரைதீவு சகா)

கொரோனா தொற்றானது தற்போது மிக வேகமாக பரவி வரும் வேளையில் மக்களையும், சேவையாளர்களையும் பாதுகாக்கும் பொருட்டு , கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை பல திட்டங்களையும் வேகமாக மாற்றியும் ,விஸ்தரித்தும் வருகின்றது.

வைத்திய அத்தியட்சகர் வைத்தியகலாநிதி இரா. முரளீஸ்வரனின் ஏற்பாட்டில் அங்குள்ள கல்விப்பிரிவு பெறுமதியான கருத்தாழமிக்க ஆலோசனைகளுடன கூடிய துண்டுப்பிரசுரங்கைளை விநியோகித்துவருகின்றது.

அதனடிப்படையில் மக்களுக்கும் சேவையாளர்களுக்கும் இடையில் ஓர் புரிந்துணர்வை ஏற்படுத்தி அனைத்து வளங்களும் மக்களுக்காக எவ்வாறு பயன்படுகின்றது என்பதை புரிந்து கொள்ளும் முகமாக துண்டு பிரசுரங்கள் வைத்தியசாலையின் சுகாதார கல்விப்பிரிவால் வழங்கப்படுகின்றன

மேலும் மக்கள் இதன் மூலம் தொற்றிலிருந்து மற்றவர்களை காக்கும் பொறிமுறைகளும் கூறப்பட்டுள்ளது.

# மக்களுக்கு நிர்ணயித்த விலையில் பொருட்களை பெற்றுக்கொடுக்க இராணுவம் களத்தில்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

இன்றைய காலகட்டத்தில் இலங்கையினுடைய சந்தை விபரத்தை பார்த்தோமேயானால் அனைத்து பொருட்களிற்கும் அதிக விலையேற்றத்தை அவதானிக்க முடிகின்றது.

இதற்கான உண்மையான காரனமாக கறுப்புச்சந்தை காணப்படுவதை மறுக்க முடியாது.

அனைத்துப் பொருட்களும் நேரடியாக அல்லாமல் மறைமுகமாக கறுப்புச் சந்தையூடாக மக்களுக்கு விற்பனை செய்யப்படுவதே இதற்கான அடிப்படைக் காரனமாக அமைகின்றது.

இலங்கையில் சில பொருட்களின் இறக்குமதி தட்டுப்பாட்டினால் பதுக்கி வைத்து கறுப்புச் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

உதாரணமாக பார்ப்போமேயானால் பால் மா, சீனி, கேஸ் மற்றும் அரிசி போன்றவை பதுக்கி வைக்கப்பட்டதாக ஊடகங்களினூடாக அறிகின்றோம். இவையே கருப்புச்சந்தையில் அதிக விலையில் விற்பனையாகின்றது என்பதை ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும்.

இவ்வாறே இன்று டொலர் ஒரு விற்பனைப் பொருளாக மாறியுள்ளது. அரசாங்கத்தின் அறிக்கையின் பிரகாரம் டொலரொன்றின் பெறுமானம் 204/- ஆக இருக்கின்றபோது கருப்புச்சந்தையில் 230/- ற்க்கும் அதிகமாக டொலர் விற்பனை செய்யப்படுவதாகவும் அறியமுடிகிறது. இதனடிப்படையில் இலங்கைக்கு பொருட்கள் கடத்துவதை தாண்டி டொலர்கள் முந்திக் கொண்டிருக்கின்றது என்பதையும் கணிக்க முடிகின்றது.

இவ்வாறான செயற்பாட்டை கட்டுப்படுத்தும் நோக்கிலே அரசாங்கம் பொருட்களிற்கான நிர்ணய விலையினை வர்த்தமானியூடாக அறிவித்திருந்தும் நிர்ணய விலையில் பொருட்களை மக்கள் பெற்றுக்கொள்ள முடியாத நிலையே காணப்படுகின்றது.

இவ்வாறு பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்கின்ற இடைத்தரகர்களுக்கெதிரான நடவடிக்கை உரிய தரப்பினரால் மேற்கொள்ளப்படாதவிடத்து விலையேற்றத்தை தடுக்க முடியாது.

எனவே மக்களின் தேவையை நிறைவேற்றும் பொருட்டு அரசாங்கம் நிர்ணயித்த விலைக்கு பொருட்களைப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கையை அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும்.

ஆகவே இதற்கு இலைங்கை இராவனத்தினரையும் முப்படையினரையும் பயன்படுத்தி இந்த அரசாங்கம் இவ்விடையத்தை நிவர்த்திக்க முடியாமை கவைலையானதொரு விடையமாகவே இருக்கின்றது.

இன்றைய காலகட்டத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கை, நாட்டின் அபிவிருத்தி விடையங்கள் கண்கானிப்பு போன்ற பல விடையங்களிற்கு இராவத்தினர் பயன்படுத்தப்படுவதை அவதானிக்க முடிகின்றது.அவ்வாறென்றால் பாதுகாப்பு அமைச்சின் கீழ் உறுவாக்கப்பட்டிருக்கின்ற Multi Task Force படையமைப்பினரைக் கொண்டாவது இரானுவத்தினரின் நேரடி கண்கானிப்பின் மூலமாக மக்களுக்கு நிர்ணயித்த விலையில் பொருட்களைப் பெற்றுக் கொடுக்கின்ற நடவடிக்கையில் ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் உடனடியாக கரிசனை கொள்ள வேண்டும்.

# ஓகஸ்ட் மாதம் மாத்திரம் 1,187 உடல்கள் நல்லடக்கம் மொத்த எண்ணிக்கை 2, 453 ஐ அடைந்துள்ளது

(எச்.எம்.எம்.பர்ஸான்)

கொரோனா தொற்றினால் மரணமடைந்த நபர்களை நல்லடக்கம் செய்யும் ஓட்டமாவடி - மஜ்மா நகர் மையவாடியில் இம்மாதம் 1 ஆம் திகதி புதன்கிழமை வரை 2,453 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதாக ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நெளபர் தெரிவித்தார்.

ஓட்டமாவடி - மஜ்மா நகர் மையவாடிக்கு தற்போது நாளொன்றுக்கு 40 க்கு மேற்பட்ட சடலங்கள் நல்லடக்கத்துக்கு வருவதாக தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

நாட்டில் மரண வீதம் அதிகரித்து காணப்படுவதால் ஓகஸ்ட் மாதம் 1,187 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதுடன், கடந்த வாரம் மாத்திரம் 306 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன.

அத்தோடு, கடந்த 23 ஆம் திகதி மாத்திரம் 57 உடல்கள் அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இதுவே நாளொன்றில் அதிகூடிய சடலங்கள் அடக்கம் செய்யப்பட்ட நாளாக பதிவாகியுள்ளது.

# 2000 ரூபா கொடுப்பனவில் பெரும்பாலோனார் பாதிப்பு

(தலவாக்கலை பி.கேதீஸ்)

அரசாங்கத்தால் வழங்கப்படும் வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கான 2000 ரூபா கொடுப்பனவு வழங்கும் விடயத்தில் பெருந்தோட்ட மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக கொட்டக்கலை பிரதேசசபை உறுப்பினர் பொன்னையா ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில் கிறேட் வெஸ்டன் கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் 650ற்கும் மேற்பட்டோர் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இதில் வெறுமனே 45 பேருக்கு மாத்திரம் 2000 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. இதனால் இப்பிரதேசத்தில் பெரும்பாலோனோர் பாதிக்கப்பட்டுள்ளனர். பால்மா தட்டுப்பாடு,சமையல் எரிவாயுவின் விலை அதிகரிப்பு போன்றவற்றால் பெருந்தோட்ட மக்கள் நாளாந்தம் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருகின்றனர்.

அரசாங்கம் வழங்கும் 2000 ரூபா கொடுப்பனவு விடயத்தில் முச்சக்கரவண்டி ஓட்டுனர்கள், நாளாந்த கூலி தொழிலாளர்களுக்கும் இந்த 2000 ரூபா கொடுப்பனவு வழங்கும் விடயத்தில் அரசாங்கம் பாரபட்சம் காட்டாமல் இந்த ஊரடங்கு காலப்பகுதிகளில் வாழ்வாதாரம் இழந்து பாதிக்கப்பட்டுள்ள அனைவருக்கும் நிவாரண கொடுப்பனவை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுக்கின்றார்.


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
STRAVEL
Flugtickets | Hotels | Reiseversichenungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க, விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


Call us now!
0791023193
0787437071
MON-FRI
11.30 - 23.30
SATURDAY
11.30 - 23.00
SUNDAY
11.30 - 18.00
GRUNAU 1
ASIANFOOD
RESTAURANT
STARTER
BBQ
GRILL-TANDOORI
SPECIAL NAAN
MIX SABJI
BIRIYANI SPL
CURRY DISHES
FISH SPL
DESERTS - ICE CREAM
COFFEE SPL
CALL WE DELIVER YOU - STAY HOME STAY SAFE
MEIERWISSENSTR 588064 ZURICH

# கத்தரிச் செய்கையில் நோய்த் தாக்கம்: விவசாயிகள் கவலை




**(கிண்ணியா நிருபர்)**

கிண்ணியாவில் சேதனப் பசளை மூலம் மேற்கொள்ளப்பட்ட கத்தரிச் செய்கையில் நோய்த் தாக்கம் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்

திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பிரதேசத்தில் அதிகளவில் பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற மரக்கறிகளை தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுதை அனைவரும் அறிந்த விடயமாகும்.

இலங்கை ஆரம்பகாலத்தில் உலக நாடுகளில் விவசாயத்தில் எவ்வாறு பெயர் பெற்று விளங்கியதோ அதே போன்று கிண்ணியா பிரதேசமும் இலங்கையில் விவசாய செய்கையில் பெயர்பெற்று விளங்குகின்றன

கிண்ணியா பிரதேசத்தில் காக்கா முனை, சம்மாவச்சதீவு, பூவரசன்தீவு,சூரங்கல், ஆயிலியடி, மணியரசன்குளம் மற்றும் மஜீத் நகர் போன்ற பகுதியில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.



கிண்ணியா மக்களின் வாழ்வாதார தொழிலாக ஆரம்பகாலத்திலிருந்து இன்று வரைக்கும் விவசாயத்தையே மேற்கொண்டு வருகின்றனர் குறிப்பாக விவசாயச் செய்கையில் சேதனப் பசளை மூலம் இரண்டு போகங்களில் மாரி , கோடை காலங்களில் விவசாயத்தை மேற்கொள்கின்றனர்

சேதனப்பசளையாக மாட்டுச் சாணம் ,ஆட்டெரு ,கோழி சாணம், உமி, சாம்பல் மற்றும் தாவரங்களின் இலை குலை போன்ற பொருட்களை பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போது கிண்ணியா பிரதேசத்துக்குட்பட்ட சம்மாவச்சதீவு பிரதேசத்தில் மாரி காலப் பயிர்ச் செய்கையினை முன்னெடுத்து வருகின்றனர்

இங்கு கத்தரி , வெண்டி , கொச்சி(மிளகாய்) ,பஸ்ட்றா ,மரவள்ளி, முருங்கை மற்றும் இராசவள்ளி போன்ற பயிர்களை மேற்கொள்கின்றனர்.

சேதனப் பசளையினை பயிர்களுக்கு பயன்படுத்துவதால் செழிப்பாக தாவரங்கள் வளர்கின்றன ஆனால் கத்தரிச் செய்கையில் ஒரு வகையான பக்டீரியா நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளதால் கத்தரி மரம் செத்து மடிகின்றது இதனால் விவசாயிகள் பாரிய பிரச்சினைகளுக்கு எதிர்நோக்கி வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

கத்தரி மரத்துக்கு ஏற்பட்டுள்ளநோயினை கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு மருத்துகளை



பயன்படுத்திய போதிலும் கட்டுப்படுத்த முடியவில்லை என தெரிவிக்கின்றனர். நோய்த் தாக்கம் தொடர்பாக விவசாய போதனாசிரியருக்கு தெரியப்படுத்தி அதனை வந்து பார்த்தும் நோய்த் தொற்று ஏற்பட்டுள்ள கத்தரி மரத்தின் மாதிரிகளை ஆய்வு அனுப்பியும் நோய்க்கான மருந்து இன்னும் கண்டு பிடிக்க படவில்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

விவசாயிகள் ஊடகங்களுக்குகருத்து தெரிவிக்கும் போது ஒவ்வொரு வருடமும் இரண்டு போகங்களில் மாரி, கோடை காலங்களில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகிறோம் விவசாயத்தை தான் எங்களுடைய வாழ்வாதார தொழிலாக செய்கின்றோம் காலை, மாலை நேரங்களில் பயிர்களை பராமரித்து வருகின்றோம்.

நான்கள் செய்கை பண்ணப்பட்டுள்ள கத்தரி மரத்துக்கு இரண்டு ,மூன்று வருடங்களாக புதிய வகையான நோய் பரவுகின்றது இதனை கட்டுப்படுத்த முடமுடியள்ளது.

ஆசை , ஆர்வத்துடன் பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்ற எங்களுக்கு இவ்வாறான நோயினால் கத்தரி மரம் இலைகள் வாடி செத்து மடிவதனால் விவசாய செய்கையில் மனமின்றி போகின்றது.

மேலும் தெரிவிக்கையில் செய்கை பண்ணப்பட்ட கத்தரியிலிருந்து உரிய விளைச்சல் பெறமுடியாது கட்டத்துக்கு மத்தியில் வாழ்கையை நடாத்தி வருவதாகவும் , இந்த நோய்க்கான தீர்வினை உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி பெற்றுத்தருவதுடன் விவசாயிகளுக்கான உபகரணங்கள் மற்றும் வாழ்வாதார உதவிகளையும் பெற்றுத்தர வேண்டும் என்று தெரிவித்தனர்.




## திருமலையில் 2000 ரூபா உதவித்தொகை கொடுப்பனவு பெறுவதற்காக 38435 குடும்பங்கள் தெரிவு

**(யூஸுப் பஹ்மி)**

தனிமைப்படுத்தல் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள இக்காலப்பகுதியில் அரசாங்கத்தின் எவ்வித கொடுப்பனவும் கிடைக்கப்பெறாத வறிய குடும்பங்களுக்கு 2000 ரூபா உதவித்தொகை கொடுப்பனவு பெறுவதற்காக திருகோணமலை மாவட்டத்தில் 38435 குடும்பங்கள் 11 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து தகுதி பெற்றுள்ளதாகவும் உரிய பிரதேச செயலக அதிகாரிகள் மூலம் குறித்த கொடுப்பனவு கிரமமான முறையில் வழங்கப்பட்டு வருவதாக மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோரான தெரிவித்தார்.

மேலும் மாவட்டத்தில் தற்போது கூடியளவு தொற்றாளர்கள் பதிவாகிய பகுதிகளில் மக்களை அறிவுறுத்தும் வகையிலான விசேட செயற்பாடுகள் பிரதேச செயலாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மக்கள் உரிய அறிவுறுத்தல்களை பின்பற்றி நடப்பதன் மூலம் கொவிட் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெற முடியும். இக்காலப்பகுதியை கூடிய கவனம் எடுத்து செயற்படல் இன்றியமையாயதது. மக்கள் இவ்விடயத்தில் கூடிய கரிசனை காட்டுவது வேண்டப்படுகின்றது. சில பிரதேசங்களில் மக்கள் முகக்கவசம் அணியாது நடமாடுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் தங்களது குடும்பத்தினர் தொற்றுக்குள்ளாகுவது மாத்திரமன்றி சமூகத்திலும் பரவக்கூடிய நிலை ஏற்படும். எனவே பொறுப்புடன் கூடிய வகையில் ஒவ்வொருவரும் நடந்து கொள்ளுமாறும் அரசாங்க அதிபர் மக்களிடம் வேண்டிக்கொண்டார்.

மேலும் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பல இடங்களில் தடுப்பூசியின் இரண்டாம் அலகு சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதுவரையிலும் உரிய வயதுப்பிரிவுகளின் கீழ் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாதவர்கள் தங்களுக்கான தடுப்பூசியை உடன் தங்களுக்கு அருகாமையில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு சென்று பெற்றுக்கொள்ளுமாறும் அவர் வேண்டிக்கொண்டார்.